உ

# யா/இணுவில் மத்திய கல்லூரி

# கல்லூரித் தினமும்
# பரிசளிப்பு விழாவும் - 2002

*30-06-2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணி*

*தலைவர் :* **திரு. துரை எங்கரசு** *(அதிபர்)* **அவர்கள்**

*பிரதம விருந்தினர் :*

**திரு. கந்தையா தேவராஜா அவர்கள்**

*(வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)*

*ஆசியுரை :*

**மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள்**

*சிறப்பு விருந்தினர்கள் :*

**திரு. த. தேவராஜா அவர்கள்**

*(முன்னாள் பிரதி அதிபர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)*

**திரு. அ. குகதாசன் அவர்கள்**

*(முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)*

*கௌரவ விருந்தினர்கள் :*

**திரு. ச. அரியராசா அவர்கள்** *(பழைய மாணவர், லண்டன்)*

**திரு. அ. சோமசுந்தரம் அவர்கள்**

*(அபிராமி பெஷன் ஹவுஸ், சுன்னாகம்)*

*பரிசில் வழங்கல் :* **திருமதி இலக்சுமிதேவி தேவராஜா அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. கல்லூரிக் கொடியேற்றல், கல்லூரிக் கீதம்
4. வரவேற்புரை
5. தலைவர் உரை, அதிபர் அறிக்கை
6. ஆசியுரை
7. சிறப்பு விருந்தினர் உரை
8. பிரதம விருந்தினர் உரை
9. பரிசளிப்பு
10. கலை நிகழ்ச்சிகள்
11. நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / இணுவில் மத்திய கல்லூரி
# கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும்
# 2002

## அதிபர் அறிக்கை

கல்வியும் கவின் கலைகளும் சிறந்து விளங்கும் இணுவைக் கிராமத்தில் மத்திய தீபமாக விளங்கும் இக் கல்லூரி தனது கடந்த 69 வருட வரலாற்றுச் சுவடுகளில் சிறப்பு மிக்க பல்வேறு சின்னங்களைப் பதித்து வந்துள்ளது. இந்தக் கல்லூரி தொடர்ந்து உருவாக்கி வருகின்ற வரலாற்றுச் சாதனைகளை எடுத்துக் கூறுவதில் பெற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவிலே முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு, சிறப்பிக்கும் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் உயர்திரு க. தேவராஜா அவர்களே! அவரதும் துணைவியார் திருமதி லக்சுமிதேவி தேவராஜா அவர்களே! ஆசி கூறி வாழ்த்த உள்ள மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயா அவர்களே! சிறப்பு விருந்தினர்களாக சமுகம் தந்து பெருமைப்படுத்தும் யாழ் கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் அன்பிற்குரிய திரு அ. குகதாசன் அவர்களே! முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபர் திரு த. தேவராஜா அவர்களே! கௌரவ விருந்தினர்களான திரு ச. அரியராசா அவர்களே! திரு அ. சோமசுந்தரம் அவர்களே! கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளில் பக்கபலமாக இருந்து வரும் விழாவிற்கு வருகை தந்துள்ள கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே! அயற் பாடசாலைகளின் அதிபர்களே! கல்லூரியின் முந்நாள் ஆசிரியர்களே! அதிபர்களே! எமது கல்லூரி ஆசிரியர்களே! அலுவலக ஊழியர்களே! கல்லூரி அபிவிருத்திச்சபை உறுப்பினர்களே! கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன் விரும்பிகளே! கல்லூரியின் மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதுடன், இக் கல்லூரியின் சார்பில் உங்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திரு க. தேவராஜா அவர்களே!

எமது மாணவர்களின் உடல், உளச் செயற்பாடுகளுக்கு ஊக்கமும் மதிப்பும் கௌரவமும் கொடுக்கும் முகமாக எடுக்கப்படுகின்ற இன்றைய விழாவிற்காக தங்கள் பணிகளை ஒதுக்கி வைத்து எம் அழைப்பை ஏற்று இன்முகத்துடன் பிரசன்னமாகி விழாவை அழகுசெய்து நிற்கும் முதன்மை விருந்தினரான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் அவர்களையும், அவர்தம் துணைவியாரையும் கல்லூரி சார்பில் வருக வருக என முதற்கண் வரவேற்கின்றேன். மதிப்பார்ந்த பெருந்தகையே! தாங்கள் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக கலந்து கொள்வது இவ்விழாவுக்கு ஒரு களதியை கொடுத்துள்ளது. ஆரம்பக் கல்வியை தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்று, வித்தியோதய பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் சிறப்பு பட்டம் பெற்று, யாழ் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்று யாழ் பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்று, பல்கலைக் கழக மாணவர் பேரவையில் பெரும் பொருளாளராகவும், வணிக மன்றத்தின் பெருந் தலைவராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் பதில் பீடாதிபதியாகவும், வைன்ல கழகத்தில் உறுப்பினராகவும், இணுவில் திருவூர் ஒன்றியம், இணுவில் பொது நூலகம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், டொன் பொஸ்கோ பாடசாலை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்து பெருந் தொண்டாற்றி வருவதை அறியாமல் எவரும் இருக்க முடியாது. வணிகத்துறையில் பல ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டுவரும் தங்களின் சிறந்த சமூகத் தொண்டும், பொதுச் சேவைகளில் அயராது பங்கு கொள்ளும் தன்மையும் புன்முறுவல் பூத்த முகமும் தங்களை எங்கள் கல்லூரிக்கு முதன்மை விருந்தினராக அழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. தங்களிடம் கல்விகற்ற பலர் இங்கு ஆசிரியராக கடமை புரிவது எமக்கு பெருமதிப்பிற்குரியதாகும். இத்தகைய சிறப்புக்களை கொண்ட தாங்களும், துணைவியாரும் கலந்து கொண்டுள்ளமையை யிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசிகூறி வாழ்த்த வந்த மகாவித்துவான் பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயா! அவர்களே தாங்கள் இந்தக் கிராமத்திற்கு புகழ் சேர்க்கின்ற சிறந்த கலைஞன். சிறந்த இசை வல்லுனர். சிறந்த ஆடல் வல்லுநர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரியின் பழைய மாணவர். எமது கல்லூரி கீதத்தை அமைத்துத் தந்தவர். ஆயிரக் கணக்கான கீர்த்தனைகளை தமிழில் எழுதியவர். நூற்றுக்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதியவர். பிரபல இசை மேதை, பாவநாசம் சிவன், நடனமேதை ருக்மணி அருண்டேல் ஆகியோருடன் இந்தியாவில் கல்விகற்ற பெருமைக்குரியவர் இசை ஆராய்ச்சியில் ஈடுபட்டு 72 மேள கர்த்தா இராகக் கட்டமைப்புக் களை வெளியிட்டுள்ளீர்கள். யாழ் பல்கலைக்கழகத்தினால் முது கலைமாணி பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டீர்கள். தங்களால் எழுதப்பட்ட நாட்டிய உருப்படிகள் இன்று உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களினால் எடுத்தாளப்படுகின்றன. இத்தகைய பல பெருமை மிக்க தாங்கள் ஆசியுரை கூற வந்திருப்பது எமக்கு பெரு மகிழ்ச்சியை தருகின்றது

திரு அ. குகதாசன் அவர்களே! தாங்கள் இக் கல்லூரியின் பழைய மாணவர். கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்று பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் சிறப்பு பட்டம் பெற்று யாழ் பல்கலைகக்கழகத்தில் பொது நிர்வாகத் துறை டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளீர்கள் ஆரம்ப காலத்தில் மக்கள் வங்கியில் எழுதுவினைஞராக சேர்ந்து தங்கள் விடா முயற்சியாலும், கல்வித் தேடலினாலும் முன்னேறி இன்று மக்கள் வங்கி முகாமையாளராக யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிக் கிளையில் பதவி வகிக்கின்றீர்கள். தங்களை எமது கல்லூரியில் இருந்து பிரிக்க முடியாதபடி பல தேவைகளை நிறைவேற்றி உள்ளீர்கள். இணுவில் திருவூர் ஒன்றியம், லயன்ஸ் கழகம் போன்றவற்றிலும் உறுப்பினராக இருந்து தாங்கள் இக்கிராமத்திற்கும் எமது கல்லூரிக்கும் பெருந் தொண்டாற்றி வருவதை நாம் அறிவோம். வருடா வருடம் எமது கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களுக்கு தங்கள் தந்தையார் நினைவாக தாங்கள் அளிக்கும் தங்கப் பதக்கம், தங்களைப் போல் மற்றவர்களையும் கல்வியில் ஊக்குவிக்கும் உயர்ந்த பண்பைக் காட்டுகின்றது. தங்களை இன்றைய விழாவில் சிறப்பு விருந்தினராக வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்..

திரு த தேவராஜா அவர்களே! கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து ஓய்வு பெற்றுள்ள தாங்கள் மலாயாவில் கிளிபோட் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்று, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர் கல்வியைப் பெற்று பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலம் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளீர்கள். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணி செய்தீர்கள். சிறந்த ஆங்கிலப் புலமை பெற்ற தாங்கள் இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ் மாவட்டக் கிளையின் பொதுச் செயலாளராக பதவி வகித்தீர்கள். ஆசிரியர்களின் முன்னேற்றத் திற்காக அரும்பாடுபட்ட தாங்கள் தொண்டை நாம் மறந்து விடவில்லை. யாழ்ப்பாணப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தில் 1995 தொடக்கம் 1998 வரை செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து யாழ்ப்பாணத்தில் துடுப்பாட்ட விளையாட்டை பிரபல்யப்படுத்துவதிலும் அதன் தரத்தை உயர்த்துவதிலும் பெரும் பங்கு கொண்டு உழைத்து வந்தீர்கள். தொலைத் தொடர்பு நிலையம் (மோட்டோரோலா) உரிமையாளர் சங்கத்தின் தலைவராக 2000ம் ஆண்டில் இருந்து இன்று வரை இருந்து வருகின்றீர்கள். கொக்குவில் இந்துக் கல்லூரியின் முந்நாள் தலைவராக தாங்கள் இருந்தமையும், இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. தங்கள் தந்தையார் திரு தம்பிஐயா அவர்களின் நினைவாக வருடந்தோறும் எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் க.பொ.த (சா/த) பரீட்சையில் முதன்மைப் பெறுபேறு பெற்ற மாண வருக்கு அளித்து வரும் தங்கப்பதக்கம் எமது கல்லூரிச் சமூகத்தினால் நன்றி கூறப்பட வேண்டிய ஒன்றாகும்.

கௌரவ விருந்தினர்களில் ஒருவராக திரு சங்கரப்பிள்ளை ஆரியரான அவர்கள் வருகை தந்துள்ளார்கள். எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளராகக் கடமையாற்றியவர். இவரது காலத்தில் தற்காலிகக் கொட்டகை அமைத்தல், இரும்புக் கதிரை, ஸ்கிறீன் ஆகியவற்றின் தேவையில் முன்னின்று உழைத்தவர். இன்று லண்டனிலிருந்து வருகை தந்து சிறப்பிக்கின்றார்.

திரு அப்பையா சோமசுந்தரம் அவர்களும் பழைய மாணவருள் ஒருவர். அவர்களது குடும்பம் மறைந்த தாயார் திருமதி சரஸ்வதி அப்பையா நினைவாக ரூபா 150,000/- பெறுமதியான "பாண்ட்" வாத்தியக் கருவியை வழங்கி உதவியுள்ளார்கள். அவர்களின் நல்ல உள்ளங்களை நினைவு கூர வேண்டியவர்களாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கல்லூரி சிறந்த கல்விப் பாரம்பரியம் மிக்க பெருமையுடையதாகும். கல்லூரியில் இருந்து ஒவ்வொரு வருடமும் வெளியேறும் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பெருமையும், புகழும் மிக்கவர்களாக வாழ்ந்து காட்டுகின்றமையையிட்டு கல்லூரி அன்னை பெருமை அடைகிறாள். இன்றைய பரிசளிப்பு விழாவில் கல்லூரி தினத்தையும் 2001ம் ஆண்டு கல்லூரி மட்ட, தேசிய மட்ட பெறுபேறுகளையும், கோட்ட, வலய, மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற பல்வேறு போட்டி நிகழ்வுகளில் மாணவர்கள் அடைந்த வெற்றிகளின் அடிப்படையில் மாணவர்களை மேலும் உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதற்காகவும் இன்றைய விழாவினைக் கொண்டாடுகின்றோம்.

இக் கல்லூரியின் முந்நாள் அதிபர்கள், ஆசிரியர்களது தன்னலமற்ற சேவைகளும் பெற்றோர், பழைய மாணவர்களது உதவிகளும், கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களது ஒத்துழைப்பும் கல்வி நிர்வாக அதிகாரிகளது வழிகாட்டல்களும் ஊக்குவிப்புக்களும் இருப்பதனால் எவ்வித சிரமும் இன்றி என்னால் இப்பாரிய பொறுப்பை நிறைவு செய்ய முடிகின்றது.

இன்று எமது கல்லூரி ஆசிரிய குழாத்தில் 41 நிரந்தர ஆசிரியர்களும்,, 02 பகுதிநேர ஆசிரியர்களும்,, 11 தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களும், 02 தொண்டர் ஆசிரியர்களுமாக 56 பேர் மொத்தமாக அடங்குவர். அத்துடன் தென்மராட்சியைச் சேர்ந்த கிளி / கோயில் வயல் பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் எம்முடன் இணைந்து கொண்டுள்ளனர்.

கல்லூரியின் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் என்பன சிறப்பாக அமைய கல்லூரியில் நிர்வாகப் பிரிவுகள் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. பிரதி அதிபர், துணை அதிபர், பகுதித்தலைவர், பாட இணைப்பாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரது முழுமையான பூரண ஒத்துழைப்பும் எனது வேலைப் பழுவைக் குறைத்து கல்லூரிச் செயற்பாடுகளை சிறப்புற நிறைவுறச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் விபரம் 2001

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பப்பிரிவு | 282 | 244 | 526 |
| இடைநிலைப்பிரிவு | 382 | 350 | 732 |
| உயர்தரப்பிரிவு | 43 | 55 | 98 |
| மொத்தம் | 707 | 649 | 1356 |

## தேசியமட்டப் பெறுபேறுகள்

### தரம் 5 பரிசில் பரீட்சை 2001 சித்தியடைந்தோர்

01. S. அனுசன்
02. K. அமலன்
03. S. ஜனார்த்தனன்
04. S. கபிலவாகீசன்
05. S. ராகவசொரூபன்
06. S. சஜீவன்
07. ப. தனகோபி
08. ப. அஜந்தினி
09. J. அதுஷ்யந்தி
10. S. இசைச்செல்வி
11. S. நிசாந்தி
12. K. தர்சிகா
13. V. தயாளினி
14. T. வேணிகா
15. A. அருந்ததி
16. K. பிந்துஜா

### க. பொ. த (சா/த) பரீட்சை 2001 பெறுபேறு

| | | |
|---|---|---|
| சமயம் | – | 84. 4% |
| தமிழ் | – | 71. 0% |
| ஆங்கிலம் | – | 10. 2% |
| விஞ்ஞானம் | – | 39. 5% |
| கணிதம் | – | 36. 5% |
| சமூகக்கல்வி | – | 50. 1% |
| சங்கீதம் | – | 38. 0% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நடனம் | - | 47. 3% |
| சித்திரம் | - | 20. 8% |
| வர்த்தகம் | - | 76. 7% |
| விவசாயம் | - | 34. 9% |
| மனையியல் | - | 40. 0% |
| தமிழ் இலக்கியம் | - | 45. 2% |
| புவியியல் | - | 48. 4% |

**மிகச்சிறந்த பெறுபேறு பெற்றோர்**

| | | | | |
|---|---|---|---|---|
| செல்வன் பா. சுரேஸ்கண்ணா | 6A | 3B | 1S | |
| செல்வன் சி. கபில்ராஜ் | 4A | 2B | 4C | |
| செல்வன் ப. ரமேஸ்கண்ணா | 2A | 4B | 2C | 2S |
| செல்வி வீ. தனுஷியா | 2A | 3B | 4C | 1S |

க. பொ. த உயர்தர வகுப்பிற்குத் தகுதியானோர் - 36பேர்

## க. பொ. த உயர்தரப் பரீட்சை – 2001 பெறுபேறு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | 87. 5% |
| வணிகக்கல்வி | - | 100% |
| கணக்கீடு | - | 86. 6% |
| அளவையியல் | - | 75. 0% |
| இந்துநாகரீகம் | - | 76. 4% |
| தமிழ் | - | 76. 4% |
| சங்கீதம் | - | 100% |
| நடனம் | - | 100% |
| சித்திரம் | - | 100% |
| புவியியல் | - | 83.3% |
| நாடகமும் அரங்கியலும் | - | 80.0% |
| பொது ஆங்கிலம் | - | 6.2% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிகச் சிறந்த பெறுபேறு**

செல்வன் பா. ஐங்கரன் 2A 1B (வர்த்தகம்)

செல்வி தி. ஸ்ரீதேவி 1A 1B 1S (கலை)

பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெற்றோர் - 02 பேர்

*க.பொ.த (சா/த), க. பொ. த (உ/த) ஆகிய பரீட்சைகளில் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றோருக்கும், சித்தியடைந்தோருக்கும், பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்கும் எனது பாராட்டுக்கள். இவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்த ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

## நிர்வாக உதவி

*எங்கள் கல்லூரிக்கு நிர்வாகக் கடமைகளை நிறைவேற்று வதற்கு செல்வி இ. அகிலாண்டேஸ்வரி முகாமைத்துவ உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

## மாணவர் ஒழுங்கு

*எமது கல்லூரியின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றிற்கும், கல்லூரியின் நற்பெயரையும், இலட்சியத்தையும் மாணவர்கள் கடைப் பிடிப்பதற்கும் இக்குழு செயற்படுகின்றது. இக்குழுவில் அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர் ஆகியோருடன் ஆசிரியர்கள் திரு இ. தேவமனோகரராசா, திரு ம. உதயகுமாரன், திரு சு. சிவகுமாரன், திருமதி பா. ஜெயராசா ஆகியோரும் பொறுப்பாக உள்ளனர். இக் குழுவின் பொறுப்பாளர்களும் ஏனைய ஆசிரியர்களும், மாணவத் தலைவர்களும் வகுப்பு மாணவ முதல்வர்களும் சிறந்த முறையில் செயற்படுவது கண்டு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

## விளையாட்டு

*எமது கல்லூரியில் விளையாட்டுத்துறை பல்வேறு வகையிலும் வளர்ச்சியடைந்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. ஆரம்பப்பிரிவு, மேற்பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் தனித்தனியாக நடைபெற்றன. ஆரம்பப்பிரிவு இல்ல விளையாட்டுப் போட்டி 07-02-2001 இலும் மேற்பிரிவு போட்டி 28-02-2001 இலும் நடைபெற்றன. தற்போது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரியில் மைதான வசதி இருக்கின்ற போதிலும் நிலம் பள்ளமாக இருப்பதனால் மழை காலத்தில் நீர் தேங்கியிருக்கும் நிலை ஒரு குறைபாடாகும். எமது கல்லூரி மாணவர்கள் கோட்ட, வலய, மாவட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி வருகின்றனர். சிறந்த விளையாட்டு வீரனாக பா. ஜனார்த்தனன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கரப்பந்தாட்டப் போட்டிகளில் எமது 15, 17, 19 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கோட்ட மட்டத்தில் முதலாம் இடங்களையும், வலய மட்டத்தில் இரண்டாம், மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர். துடுப்பாட்ட போட்டியில் 19 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கோட்ட மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுள்ளனர். கோட்ட மட்ட மெய் வல்லுனர் போட்டிகளிலும் எமது மாணவர்கள் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுள்ளனர். மாணவர்களின் வெற்றிக்குக் காரணமாக இருக்கின்ற பயிற்சிப் பொறுப்பாளர்களான ஏ. ஸ்ரீரங்கன், மு. காந்தராஜா எஸ். சதீஸ் ஆகியோருக்கும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களான திரு இ. தேவமனோகரராசா, திரு ம. உதயகுமாரன், செல்வி சி. யோகேஸ்வரி ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## ஆசிரிய நலன்புரிக் கழகம்

கல்லூரி ஆசிரிய நலன்புரிக கழகத்தின் தலைவராக திரு இ. வை. கனகநாயகம் அவர்களும், செயலாளராக திருமதி பி. லிங்கசபேசன் அவர்களும், பொருளாளராக திருமதி ல. இளங்கோ அவர்களும் கடமையாற்றுகின்றனர். இக்கழகம் செல்வி பூமணி சின்னத்தம்பி, திரு தி. ஜெகதீஸ்வரன், திரு ப. அருமைநாதன், திருமதி தா. பத்மநாதன், செல்வி நா. சண்முகலிங்கம் ஆகியோருக்கு பிரிவுபசார வைபவங்களை ஒழுங்கு செய்து நடாத்தியது. எமது கல்லூரியின் பழைய மாணவரும், சிறந்த கல்விமானுமாகிய கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் பேராசிரியர் பதவியைப் பெற்றமைக்காக இக் கழகம் பாராட்டு விழா வைபவத்தை ஒழுங்கு செய்து நடாத்தியது. அண்மையில் எனது பொன்விழா நிகழ்வையும் இக்கழகம் வெகு விமரிசையாக நடாத்தியதென்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள் கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்

மாறிவரும் தகவல் தொழில்நுட்ப உலகில் அனைத்துமே கணனி மயமாகும் இன்றைய நாளில் தேடல் என்பது மிக மிக அவசியமாகும். எமது மாணவர்கள் நூல்களைத்தேடி தமது அறிவை விருத்தி செய்ய கல்லூரி நூலகம் பேருதவி புரிந்து வருகின்றது. 150 மாணவர்கள் நூலகத்தின் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். எமது நூலகத்தில் சங்ககாலம் முதல் நவீன இலக்கியங்கள் வரை நூல்கள் உள்ளன. பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எமது கல்வித் திணைக்களம் நூலகத்திற்கு வேண்டிய பல துறைசார்ந்த நூல்களைத் தந்து உதவியுள்ளது. அத்துடன் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளரும், சுகாதார கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தருமாய் இருந்த திரு கார்த்திகேசு வைத்தீஸ்வரன் அவர்கள் ரூபா 2000/- பெறுமதியான நூல்களை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். எமது கல்லூரியின் பழைய மாணவரும் தொழிற்திணைக்களப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய திருமதி சந்திரபவானி - பரமசாமி அவர்கள் ரூபா 5000/- பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். இவ்வாறாக பல வழிகளிலும் நூலகத்திற்கு நூல்கள் பெறப்பட்டு வருகின்றது. நூல்கள் யாவும் பட்டியலிடப்பட்டு நூலகப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றும் திருமதி ல. இளங்கோ அவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டு மாணவர் களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

## ஆசிரிய இடமாற்றம்

இக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு தி. ஜெகதீஸ்வரன் அவர்கள் தீவகப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். திருமதி தா. பத்மநாதன், செல்வி ஆ. சர்வாயினி, செல்வி செ. லதா ஆகிய ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலைக்குப் பயிற்சி நெறிக்காகச் சென்றுள்ளனர். பகுதிநேர ஆங்கில ஆசிரியை திருமதி தி. அருளானந்தம் அவர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள். மற்றொரு பகுதி நேர ஆங்கில ஆசிரியை செல்வி சந்திரலதா கல்வியியல் கல்லூரியில் கணிதக் கற்கை நெறிக்காகச் சென்றுள்ளார். இவர்களுக்குப் பதிலாக செல்வி செ. கலாவாணி வே. மதிவதனி ஆகியோர் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்று கின்றனர். விவசாய ஆசிரியராகக் கடமையாற்றிய திரு வே. திருச்சபேசன் அவர்கள் பதவி உயர்வு பெற்று பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விரிவுரையாளராகச் சென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு பெறுவோர்

எங்கள் கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியர்களாக கடமையாற்றிய திரு த. செல்வரத்தினம், திருமதி த. கனகசபாபதி, திரு ந. ச. யோகீஸ்வரன், செல்வி பூ. சின்னத்தம்பி, திருமதி சி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் இவ்வருடம் ஓய்வு பெற்றுள்ளார்கள். இவர்களது சேவைகளை நன்றி கூறுகின்றோம்.

## நியமனம்

தென்மராட்சிப் பகுதியில் கடமையாற்றிய கிளி / கோயில் வயல் பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் தற்காலிகமாக இணைந்து கொண்டுள்ளனர். தென்மராட்சியில் வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த திரு பொ. சிவராசா, திரு பொ. நடேசலிங்கம், திருமதி பா. வர்ணகுலராசா, திருமதி சு. யோகராசா, செல்வி சி. சிவசாந்தினி, செல்வி க. முருகப்பா செல்வி பா. திருமகள், திருமதி த. கனகரத்தினம், திரு வீ. நடராசா, திரு கா. குமாரபரன் ஆகியோரும் தற்காலிகமாக இணைந்து கொண்டுள்ளார்கள். திருமதி ரே. குபேரநாதன் ஆங்கில ஆசிரியராகவும் திருமதி ஆ. இராமேஸ்வரன் மனையியல் ஆசிரியர் ஆகவும் திருமதி ஈ. தர்மலிங்கம் இந்துநாகரிகம் கற்பிக்கும் ஆசிரியராகவும், செல்வி பே. லதா விஞ்ஞான ஆசிரியராகவும் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்கள். ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாக திருமதி வி. உமாசுதா சர்மா, திருமதி ஜெ. பழனிவேல், திரு இ. வை. கனகநாயகம் ஆகியோரும் எமது கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்கள்.

## சிற்றூழியர்கள்

ஆய்வுகூடப் பணியாளராகக் கடமையாற்றும் திரு வே. சர்வேஸ்வரன், சுகாதார தொழிலாளியாக கடமையாற்றும் திரு இ. ஜெயக்குமார், அலுவலக பணியாளராகக் கடமையாற்றும் திரு அ. மகேந்திரராசா ஆகியோர் சிறப்பாக தங்கள் கடமைகளை ஆற்றுகின்றனர். இவர்களையும் பாராட்டிக் கொள்கின்றேன்.

## ஆரம்ப பிரிவும் அதன் செயற்பாடுகளும்

1 முதல் 5 வரையுள்ள ஆரம்ப பிரிவில் 526 மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இப்பிரிவினரை பகுதித் தலைவர்களான திரு வி. பரஞ்சோதி, திரு க. அழகானந்தம் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் பதின்மூன்று ஆசிரிய, ஆசிரியைகளின் வழிகாட்டலில் செயற்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 1 மாணவர்களது கால்கோள் விழா, நடராஜர் அபிடேகம், விளையாட்டுப் போட்டி, மாணவர் மன்றச் செயற்பாடு, வாணிவிழா, கல்விச் சுற்றுலா, வெளிக்கள செயற்பாடுகள் என்பனவும் தனித்த சிறப்புடைய அம்சங்களாகும்.

## மன்றங்கள்

எமது கல்லூரியில் இந்துமா மன்றம், உயர்தர மாணவர் மன்றம், தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், வணிக மன்றம், கவின்கலை மன்றம், விஞ்ஞான மன்றம், கணித மன்றம், சமூகக்கல்வி மன்றம்,, சாரணர்களும் வழிகாட்டிகளும் ஆகியன சிறந்த முறையில் நற்பணி யாற்றுகின்றன. இம்மன்றங்கள் சிறப்புறச் செயற்பட வழிநடாத்தும் பொறுப்பாசிரியர்களுக்கும் நிர்வாகக் குழுவினருக்கும் நன்றி கூற வேண்டிய கடமை எனக்குண்டு. மன்றங்களில் தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபதிபர் போன்றோர் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மாதம் இரண்டு முறை மன்றங்களைக் கூட்டி கல்லூரி மாணவர்களிடையே திறன்களை விருத்தி செய்ய உதவுகின்றனர். இத்தகைய மன்றங்களின் செயற்பாட்டினால் மாணவர்களிடையே சீரான ஆளுமைப் பண்புகள் உருவாகின்றன. கல்லூரியில் இயங்கும் அனைத்து மன்றங்களிற்கும் எனது நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சித்திரக்கழகம் தனிச்சிறப்பு மிக்கதாக செயற்பட்டு வருகிறது. ஆசிரியை சி. யோகேஸ்வரி அதன் பொறுப்பை ஏற்று நடாத்தி வருகின்றார்.

காங்கேசன்துறை மாவட்டத்தை சேர்ந்த எங்கள் சாரண மாணவர்கள் இத்துறையில் படிப்படியாக பல வளர்ச்சிகளையும் பெற்று இன்று ஒரு உன்னத நிலையில் உள்ளனர். இப்போது மொத்தமாக 50 சாரணர்கள் இவ் அணியில் உள்ளனர். இவ்வாண்டு இவர்கள் பல பாடசாலை செயற்பாடுகளையும் மற்றும் சமூக செயற்பாடுகளிலும் தீவிர பங்கேற்றதுடன் யா / சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த சாரணர் பாசறையில் பங்கேற்று பல சான்றிதழ்களையும் அனுபவத்தையும் பெற்றுள்ளனர். இப்பாசறை சிறப்புற அமைவதற்கு ஒத்துழைத்த பழைய மாணவர்களும் ஆசிரியர்கள் வரிசையில் திரு ம. உதயகுமாரன், திரு இ. கதிர்காமநாதன் திரு ஏ. ஸ்ரீரங்கன் போன் றோரும் சாரணர்கள் நன்றி கூற கடமைப்பட்டுள்ளனர். மேலும் சிறந்த சாரணர்களாகிய செல்வன் தி. சத்தியநாதன் செல்வன் பா. நிருசன், மற்றும் சிறந்த முதலுதவியாளன் செல்வன் த. இந்துஜன், செல்வன் மோ. கௌசன் ஆகியோரும் குறிப்பிடக் கூடியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை உயர்தர மாணவராகிய செல்வன் சி. சிறிதக்சன் சாரணர் தலைவராகவும் திரு க. சண்முகநாதன் அவர்கள் பொறுப் பாசிரியராகவும் இருந்து இத்துறையை சிறப்புற வழிநடத்திச் செல் கின்றனர்.

கல்லூரி அந்தஸ்தை நிலைநாட்டும் மன்றங்கள் பலவற்றில் வழிகாட்டிகள் அமைப்பு சிறப்பாக விளங்குகின்றது. இன்று 130க்கு மேற்பட்ட பாடசாலைகள் யாழ் மாவட்டத்தில் வழிகாட்டிகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்க எமது பாடசாலை 1991ம் ஆண்டிலேயே 70வது இலக்கத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. முதலில் 19பேர் சின்னஞ் சூட்டப்பட்டுத் துரித வளர்ச்சி பெற்றது. இடைக்காலத்தில் இயங்க முடியாது போனாலும் இப்பொழுது மீண்டும் தலைதூக்கி இன்று 30 வழிகாட்டிகளைக் கொண்ட அமைப்பாக செல்வி சி. கார்த்திகா தலைமையில் இயங்கி வருகிறது. ஆசிரியர்கள் திருமதி இ. அரியரட்ணம், செல்வி பு. முருகேசு ஆகியோர் வளர்த்து வந்த முயற்சி திருமதி மாலினி உலகநாதன் , திரு க. பிரபாகரன் ஆசிரியர்களினால் தொடரப்பட்டது. ஆசிரியை செல்வி லதா செல்வராசாவின் சேவை குறிப்பிடத்தக்கது. இவர் பொறுப்பேற்று நடாத்திய காலத்தில் மிகச் சிறப்பாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையை நிர்வகிப்பதில் சமுதாயப் பங்களிப்பு கட்டாய மானது என்ற வகையில் எமது கல்லூரியின் பழைய மாணவாகள் கல்லூரியின் அனைத்து செயற்பாடுகளிலும் சகல வழிகளாலும் உதவுகின்றார்கள். இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் வெளிநாடு களில் சிறந்த பதவிகளை வகித்து கல்லூரியின் வளர்ச்சிக்கென ஆண்டுதோறும் நிதியுதவி செய்து கொண்டு இருக்கின்றார்கள். இன்றைய பரிசளிப்பு விழாவில் அவர்களது அரும்பணிகளையும் அன்புடன் நினைவு கூறுகின்றேன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

அதிபரது தலைமையில் இயங்கும் இச் சபையில் செயலாளராக திரு க. தர்மநாயகம் அவர்களும் பொருளாளராக திரு ம. உதயகுமாரன் அவர்களும் செயலாற்றி வருகின்றனர். கல்லூரியின் அனைத்து நிரந்தர ஆசிரியர்களும் இச் சபையில் உறுப்புரிமை பெற்றவர்கள். இச் சங்கமானது புதிய இரண்டாம் மாடிக்கட்டடம், கட்புல சோதனை அறை போன்ற நிர்மாணங்களை பொறுப்பேற்றுள்ளது. திணைக்கள உதவி மலையென உயர்ந்து நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் மக்கள் ஐக்கிய ஒன்றியம் பெரிய பிரித்தானியா, கனடா வாழ் இணுவில் திருவூர் ஒன்றியம் ஆகியன செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் மூலம் வழங்கிவரும் நிதியுதவி விதந்துரைக்கப்பட வேண்டியது. இவர்கள் தம் உதவிகளும் ஒத்தாசைகளும் தொடர்ந்தும் கல்லூரிக்குக் கிடைத்திட ஆண்டவன் அருள் பாலிப்பாராக.

## இவ்வாண்டின் வேலைத் திட்டங்களும் அன்பளிப்புக்களும்

01) மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை இரு கணனிகளும், வலி - கல்வித் திணைக்களம் கட்புல செவிப்புல சாதனங்களைப் பேணும் கட்டட உதவியும் வழங்கியுள்ளது.

02) கல்லூரியின் தென்மேற்கு எல்லையில் புதிய மாடிக் கட்டடம் அமைப்பதற்கான நிதி 10 லட்சம் ரூபாவை ரான் (RR4N) நிறுவனம் மூலம் பெற்று தற்பொழுது இரண்டாம் மாடி வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

03) <u>நடராசா தையல்நாயகி அம்மா நினைவு நிதி</u>

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு ந. சச்சிதானந்த யோகீஸ்வரன் அவர்களது பெற்றோர் நடராசா தையல்நாயகி அம்மா ஆகியோரின் பெயரால் பரிசளிப்பு நிதியத்திற்கு ரூபா 5000/- அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

04) <u>சரஸ்வதி அப்பையா நினைவு அன்பளிப்பு</u>

காலஞ் சென்ற திருமதி சரஸ்வதி அப்பையா அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது புதல்வர்களால் ரூபா 1 இலட்சம் பெறுமதியான "பாண்ட்" வாத்தியக் கருவிகள் எமது கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதில் திரு செ. இலகுநாதனின் கடின உழைப்பு குறிப்பிடத்தக்கது.

05) எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்களான திருமதி க. இராசையா, செல்வி பூ. சின்னத்தம்பி, திருமதி த. கனகசபாபதி ஆகியோர் பெயரால் பரிசளிப்பு நிதியத்துக்கு நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) எமது கல்லூரியில் நீண்டகாலமாக ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றி அமரத்துவமடைந்த திருமதி சண்முகவடிவு பஞ்சாட்சரம் அவர்களது புதல்வி திருமதி பத்மா ஸ்ரீகாந்தலிங்கம் இலண்டலிருந்து தாயாரின் நினைவாக ரூபா 30,000/- அன்பளிப்பு செய்துள்ளார். இந்நிதியை வருடாந்தம் கல்லூரியில் நடைபெறும் தமிழ்த்தின விழாவிற்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டதுடன் எதிர் காலத்தில் இந்நிதியின் வைப்பு ரூ 100,000/- ஆக உயர உள்ளதையும் அறிவித்துள்ளனர்.

07) மறைந்த ஓய்வு பெற்ற முன்னாள் இக்கல்லூரி ஆசிரியர்கள் திரு திருமதி செல்லையா புவிநாயகம் அவர்களின் நினைவாகவும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். அதனை இவ்வருடம் ஜனவரியில் இருந்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம். ரூபா 100,000/- வைப்பு செய்யப் பட்டுள்ளது. முதற்கட்டமாக அ. அனுசாளினி, இ. பிரவீனா, ம. மகிபன், சி. நிருஷன், த. ஜீவிதா, சீ. சுபித்திரா ஆகிய ஆறு மாணவர்கள் புலமைப் பரிசிலைப் பெற்றுள்ளார்கள்.

# நன்றி நவிலல்

எமது கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகள், கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கும் எமது ஆசிரியர்களுக்கும், பாட இணைப்பாளர்களுக்கும் பிரதி அதிபர், துணை அதிபர், பகுதித்தலைவர், முகாமைத்துவ உதவியாளர், சிற்றூழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புறநிலைச் செயற்பாடுகளில் பங்கு கொண்ட மாணவர்களுக்கும் அவர்களைப் பயிற்றுவித்து வெற்றி பெறச் செய்த ஆசிரியர்களுக்கும் எது நன்றிகள் உரித்தாகுக. 2001 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா / த), உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமானதாக அமைய வழிகாட்டிகளாகத் திகழ்ந்த ஆசிரியர்களுக்கும், கல்லூரிக்கு பெருமை தேடித் தந்த மாணவர் களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கணிப் பீட்டு முறை வெற்றிடங்களுக்குப் பொறுப்பாக உள்ள ஆசிரியர் திரு சு. சிவகுமாரன் அவர்களுக்கு எனது நன்றிகள். கல்லூரி விடுமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலும் காலை மாலை நேரங்களிலும் மேலதிக வகுப்புக்களை நடாத்திய ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கல்லூரியின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக அடிக்கடி வருகை தரும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு வீ. இராசையா அவர்களுக்கும், கோட்ட [redacted] கல்விப் பணிப்பாளர் திரு அ. தற்பரானந்தன் அவர்களுக்கும் ஆசிரிய ஆலோசகர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்லூரியின் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்து செயற்படும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை அவற்றின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

கல்லூரியில் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டி, தமிழ்த்தின விழா, பரிசளிப்பு விழா போன்றவற்றிற்கும் நிதி உதவிகளையும் பரிசுப் பொருட்களையும் வழங்குகின்ற பழைய மாணவர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் பட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஒட்டு மொத்தமாக இவ்வாண்டின் வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு உதவிய அனைவருக்கும் எனது நன்றிகளை கூறி இன்னும் எவர்களுக்காவது நன்றி கூறாமல் இருந்தால் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் இவ்வறிக்கையை நிறைவு செய்கின்றேன்

நன்றி - வணக்கம்.

**அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆளணியினர்

| | |
|---|---|
| திரு த. எங்கரசு | அதிபர் B.A Dip. in. Ed S.L.P.S I |
| திருமதி இ. அரியரட்ணம் | பிரதிஅதிபர் B.A Dip. in.Ed |
| திரு கு. ரகுநாதன் | B. Com Dip. in. Ed |
| திருமதி பா. ஜெடராசா | B. A Dip. in. Ed |
| திருமதி ரே. குபேரநாதன் | B. Sc Dip. in Ed |
| திரு க. சண்முகநாதன் | பகுதித்தலைவர் B.A English |
| திரு ம. உதயகுமாரன் | B. Com Dip. in. Ed |
| திரு இ. தேவமனோகரராஜா | விசேட பயிற்றப்பட்ட கணிதம் |
| திருமதி ம. உலகநாதன் | சங்கீத டிப்ளோமா |
| திரு த. யோகேஸ்வரன் | விசேட பயிற்றப்பட்ட கணிதம் |
| திரு சு. சிவகுமாரன் | பயிற்றப்பட்ட தமிழ் |
| திருமதி ம. செந்தில்குமரன் | விசேட பயிற்றப்பட்ட விஞ்ஞானம் |
| திருமதி சி. பஞ்சாயுதன் | பயிற்றப்பட்ட சமயம் |
| திரு இ. கதிர்காமநாதன் | பயிற்றப்பட்ட சமூகக்கல்வி |
| திருமதி ல. இளங்கோ | B. Com Dip. in. Ed |
| திரு வே. திருச்சபேசன் | B. A Dip. in. Ed |
| திருமதி ஆ. இராமேஸ்வரன் | பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் |
| திருமதி வ. ஸ்ரீஸ்கந்தராசா | B. A |
| திருமதி கௌ. இராமநாதன் | B. A (Hons) |
| செல்வி பொ. ஜெயவதனா | விசேட பயிற்றப்பட்ட விஞ்ஞானம் |
| செல்வி சு. சுலோசனா | பயிற்றப்பட்ட சங்கீதம் |
| செல்வி சி. யோகேஸ்வரி | பயிற்றப்பட்ட சித்திரம் |
| திருமதி ஓ. லீலா | பயிற்றப்பட்டவிவசாயம் |
| திருமதி க. பிரபாகரன் | பயிற்றப்பட்ட ஆங்கிலம் |
| திருமதி பீ. லிங்கசபேசன் | B. A (Hons) Dip. in. Ed |
| திருமதி தி. கருணாகரன் | பயிற்றப்பட்ட நடனம் |
| செல்வி சு. சண்முகலிங்கம் | தகுதிகாண் விஞ்ஞானம் |
| செல்வி ஏ. பேரானந்தன் | பயிலுநர் விஞ்ஞானம் |
| திருமதி ஈ. தர்மலிங்கம் | B. A Dip. in. Ed |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்

| | |
|---|---|
| திரு வி. பரஞ்சோதி | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திருமதி க. குணராஜா | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திரு சி. சிவநேசன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திருமதி த. நகுலேஸ்வரன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திரு சு. அழகானந்தம் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| செல்வி ஞா. பொன்னையா | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திரு இ. வை. கனகநாயகம் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திருமதி அ. சண்முககுமார் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திருமதி யோ. சூரியகுமார் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| திருமதி ஜெ. பழனிவேல் | B. A Dip. in. Ed |
| திருமதி வ. உமாசுதசர்மா | பயிற்றப்பட்ட சமயம் |

## 2002 இல் புதிதாக இணைந்த ஆசிரியர்கள்

திருமதி மா.சிவசுதன்
திருமதி பா. சுகந்தி
திரு த. செல்வகுமார்
திருமதி க. செங்காதரன்
செல்வி வே. மேகலா
செல்வி ப. சுதாத்மிகா
திருமதி ச. கைலாயநாதன்

## பயிற்சி ஆசிரியர்கள்

செல்வி ஆ. அருளானந்தம்
செல்வி த. சுகந்தி
செல்வி R. டயானி
திருமதி க. இராஜமனோகரன்

## ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்கள்

செல்வி வே. மதிவதனி
செல்வி செ. கலாவாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தற்காலிக இணைப்பு

திரு பொ. சிவராசா
திருமதி பா. வர்ணகுலராசா
திருமதி பு. லோகநாதன்
திருமதி சு. யோகராசா

### தொண்டர் ஆசிரியர்கள்

திரு ஏ. சிறீரங்கன்
செல்வி ந. காசினிதேவி
செல்வி பா. அடர்ணா
திரு P. விஜிந்தன்
செல்வி கு. தர்சிகா
திருத. சுதன்
திரு S. ஸ்ரீபாலா

### முகாமைத்துவ ஊழியாளர்

செல்வி அ. இராஜரட்ணம்

### கல்விசாரா ஊழியர்கள்

திரு வே. சர்வேஸ்வரன்
திரு அ. மகேந்திரராசா
திரு இ. ஜெயக்குமார்

### ஓய்வு பெற்றோர்

திருமதி த. கனகசபாபதி
திரு த. செல்வரத்தினம்
திரு ந. ச. யோகீஸ்வரன்
திருமதி சி. சிவசுப்பிரமணியம்
செல்வி பூ. சின்னத்தம்பி

### இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திரு தி. ஜெகதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / இணுவில் மத்திய கல்லூரி

## பரிசில் பெறுவோர் விபரம் - 2002

(திருமதி சி. விநாயகமூர்த்தி அவர்களின் அன்பளிப்பு)

## தரம் - 1 2002

| பிரிவு A | நிலை |
|---|---|
| பாஸ்கரன் அபிராமி | 1 |
| ஆனந்தசோதி கமலினி | 2 |
| தேவகரன் லக்ஸ்மன் | 3 |
| கோபிதரன் கீர்த்தனா | 4 |
| சர்வேஸ்வரன் தனுஷா | 5 |

**பிரிவு B**

| | |
|---|---|
| ரகுநாதன் கோசிகா | 1 |
| பாண்டியன் நர்சிகா | 2 |
| அருந்தவகுமார் கோபிதா | 3 |
| தயாபரன் தருசியா | 4 |
| சம்பந்தன் டயானி | 5 |

**பிரிவு C**

| | |
|---|---|
| நாகேந்திரன் குமரன் | 1 |
| சிறிதரன் யதீஷன் | 2 |
| கருணாகரன் மதிவதனி | 3 |
| ஜெகநாதராசா உஷாந்தினி | 4 |
| தயாபரன் கபூரன் | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( திரு சு. தெட்சனாமூர்த்தி அவர்களின் அன்பளிப்பு )

## தரம் - 1 2001

### பிரிவு A

| | நிலை |
|---|---|
| கிருஸ்ணபாலன் மதூசன் | 1 |
| கதிர்காமசோதி தீபிகா | 2 |
| சிவானந்தம் பிரவீணன் | 3 |
| சோதிலிங்கம் வரகுலன் | 4 |
| சிவனேசன் கஜனா<br>சண்முகேஸ்வரன் இனியாள் | 5 |

### பிரிவு B

| | |
|---|---|
| பாலகுமார் பாலஜீவன் | 1 |
| சாந்தசோதி இசைவேந்தன் | 2 |
| பிரபாகரன் வத்சாங்கன் | 3 |
| மகாதேவன் திவாகினி | 4 |
| கண்ணபிரான் தன்யா | 5 |

### பிரிவு C

| | |
|---|---|
| வரதராஜா தனுஜன் | 1 |
| தவக்குமார் தவர்ஜனா | 2 |
| இராசேந்திரன் சந்தோஷினி | 3 |
| அருமைநாதன் சண்முகப்பிரியன் | 4 |
| அமிர்தகுலசிங்கம் அரவிந்தன்<br>சதானந்தன் சர்மினி | 5 |

### பிரிவு D

| | |
|---|---|
| கனகசபை போல்ராஜ் | 1 |
| முத்துராசா மதுரா | 2 |
| செல்வக்குமரன் | 3 |
| செல்வநாயகம் கிருசன் | 4 |
| சாமிநாதன் கஜமுகன் | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 2

**பிரிவு A** **நிலை**

| | |
|---|---|
| சண்முககுமார் அருள்பவன் | 1 |
| சிவநேசன் சிவகணேசன் | 2 |
| சிவபாலன் அலைமகள் | 3 |
| விக்கினேஸ்வரன் ஜர்சிகன் | 4 |
| அரிகரசுப்பிரமணியக்குருக்கள் தேனுகா | 5 |

**பிரிவு B**

| | |
|---|---|
| சிவசுப்பிரமணியம் கோகிலவர்த்தனி | 1 |
| கனகலிங்கம் அபிராமி | 2 |
| சிவேஸ்வரன் சோபிதா | 3 |
| விக்கினேஸ்வரன் மகாசேனன் | 4 |
| பொன்ராசா தனுசன் | 5 |

**பிரிவு C**

| | |
|---|---|
| சிவானந்தன் யாதவன் | 1 |
| திருச்செல்வம் டினோஜா | 2 |
| கோமலேஸ்வரன் மயூரன் | 3 |
| கௌரிகுமார் சாரங்கன் | 4 |
| அருந்தவச்செல்வம் சுமினா | 5 |

**பிரிவு D**

| | |
|---|---|
| கருணாநிதி ஜெனித்திரா | 1 |
| சண்முகவடிவேல் சேயோன் | 2 |
| வேலாயுதம் கிரிசாந்தன் | 3 |
| கோவிந்தராசா ஜனுஷன் | 4 |
| தயாபரன் தர்சிகா | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 3

## பிரிவு A

| | நிலை |
|---|---|
| சோதிலிங்கம் அகிலா | 1 |
| மகேந்திரலிங்கம் கீர்த்திகன் | 2 |
| நாகவேல்ராசா நவதீபன் | 3 |
| பாலராசன் வர்ஷினி | 4 |
| தவராசா எழிலினி | 5 |

## பிரிவு B

| | |
|---|---|
| திருஞானசோதி கஜேந்திரன் | 1 |
| சந்திரமோகன் | 2 |
| சத்தியநாதன் சஞ்சீவன் | 3 |
| இராசலிங்கம் அரிகஹரன் | 4 |
| தயானந்தன் ரூபிகா | 5 |

## பிரிவு C

| | |
|---|---|
| முத்துராசா மிதுலா | 1 |
| கோவிந்தராசா தேனிகா | 2 |
| சாந்தசோதி இசைப்பிரியா | 3 |
| சச்சிதானந்தசிவம் வேணிலன் | 4 |
| திருஞானச்செல்வம் தனுசியன் | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 4

**(அன்பளிப்பு: திரு சு. சண்முககுலகுமாரன், அதிபர் சங்குவேலி அ. த. க. பாடசாலை)**

| | |
|---|---|
| தவராசா நாராஜனி | தமிழ், விஞ்ஞானம், சமயம் 1ம் இடம்<br>கணிதம், ஆங்கிலம், அழகியல் 2ம் இடம்<br>சுற்றாடல் 3ம் இடம் |
| பரமேஸ்வரன் நிவேதினி | கணிதம், வாசிப்பு, சுற்றாடல் 1ம் இடம்<br>விஞ்ஞானம் 2ம் இடம் |
| அமரசிங்கம் சாரங்கன் | சமயம், ஆக்கம் 1ம் இடம்<br>தமிழ் 2ம் இடம் |
| பாலகிருஷ்ணன் சேகரன் | சமயம் 2ம் இடம்<br>கணிதம், தமிழ் 3ம் இடம் |
| சத்தியசீலன் கோபிகசக்தி | ஆக்கம், வாசிப்பு 1ம் இடம்<br>அழகியல் 2ம் இடம் |
| புஸ்பராசா யபர்ணா | ஆங்கிலம் 1ம் இடம் |
| பொன்னம்பலம் அனுஷாயினி | அழகியல் 1ம் இடம் |
| திருச்செல்வம் நிரோசன் | ஆக்கம் 1ம் இடம் |
| உதயகுமாரன் அமிர்தா | வாசிப்பு 1ம் இடம் |
| செல்வரட்ணம் தர்மிகா | சுற்றாடல் 3ம் இடம் |
| தர்மநாயகம் துஷாயினி | ஆங்கிலம் 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 5

| | |
|---|---|
| *வேலாயுதம் அஜந்தினி* | கணிதம், தமிழ், ஆரம்ப விஞ்ஞானம், சுற்றாடல், ஆக்கம் 1ம் இடம் |
| *கணேசலிங்கம் பவன்* | வாசிப்பு, அழகியல் 1ம் இடம்<br>கணிதம், விஞ்ஞானம் 2ம் இடம்<br>சமயம், தமிழ் 3ம் இடம் |
| *சிவபாலன் சிந்து* | சுற்றாடல், சமயம் 1ம் இடம்<br>தமிழ், வாசிப்பு 2ம் இடம்<br>ஆக்கம், அழகியல் 3ம் இடம் |
| *தெய்வேந்திரம் லக்சிகா* | சமயம், ஆங்கிலம் 2ம் இடம் |
| *பு. காயத்திரி* | கணிதம், ஆரம்ப விஞ்ஞானம் 3ம் இடம் |
| *கம்பதாஸன் திருநிறைஞ்சன்* | ஆங்கிலம் 1ம் இடம் |
| *சிவராஜலிங்கம் சுதர்சனா* | ஆக்கம் 2ம் இடம் |
| *சண்முககுமார் அர்ச்சனா* | ஆக்கம் 2ம் இடம் |

## கிளி / கோயில்வயல் சி. சி. த.க பாடசாலை
## பரிசில் பெறும் மாணவர் விபரம்

**தரம் 1**
குணசிங்கம் இந்துஜா
வைத்தீஸ்வரன் கார்த்திகா

**தரம் 2**
சிவனத்தினராசா தாட்சாயினி (2B)
மகேந்திரன் நிக்ஷன் (2C)
குமாரசாமி தூபாளினி (2C)
இராசேந்திரம் ஜெய்சாந் (2D)

**தரம் 3**
கேதீஸ்வரக்குருக்கள் பவப்பிரியசர்மா
குணசிங்கம் திசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தரம் 4** | சிவரத்தினராசா ரஜுசியா | (4A) |
| | மகேந்திரன் கிலெக்ஷன் | (4B) |
| | சிவானந்தன் சிவாங்கினி | (4C) |
| | சிவசுப்பிரமணியம் யதுசரணன் | (4C) |
| **தரம் 5** | நவரட்ணம் கோகினி *(சகல பாடங்களிலும் திறமை)* | |

## தரம் - 6

| | |
|---|---|
| *ப. போஜினி* | சமயம், கணிதம், அழகியல் 1ம் இடம்<br>சுகாதாரம் 2ம் இடம் |
| *த. நாரணி* | சமயம் 2ம் இடம்<br>சுகாதாரம், சுற்றாடல் 3ம் இடம் |
| *பா. யசோதா* | சுற்றாடல் 1ம் இடம்<br>தமிழ், ஆங்கிலம் 2ம் இடம்<br>சமயம் 3ம் இடம் |
| *சி. நிருபன்* | தமிழ் 1ம் இடம் |
| *கோ. கிருஷாந்தி* | சுகாதாரம் 1ம் இடம்<br>அழகியல் 2ம் இடம்<br>கணிதம் 3ம் இடம் |
| *நி. பிரகாஸ்* | கணிதம் 2ம் இடம்<br>ஆங்கிலம் 3ம் இடம் |
| *பா. மாதுரி* | ஆங்கிலம் 1ம் இடம்<br>அழகியல் 3ம் இடம் |
| *க. செந்தூரன்* | சுற்றாடல் 2ம் இடம்<br>தமிழ் 3ம் இடம் |
| *இ. கிருத்திவாசன்* | சித்திரம் 1ம் இடம் |
| *பா. துவாரகன்* | சித்திரம் 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 7

| | |
|---|---|
| தி. தரணிகா | தமிழ், நடனம் 1ம் இடம்<br>சுகாதாரம், சமயம் 2ம் இடம் |
| ச. ஆதித்தன் | ஆங்கிலம், சமூகக்கல்வி, விஞ்ஞானம், சித்திரம் 1ம் இடம்<br>சமயம் 2ம் இடம்<br>தமிழ், சுகாதாரம் 3ம் இடம் |
| ப. கலைவாணி | சமயம் 1ம் இடம்<br>நடனம் 2ம் இடம் |
| ப. பபிராஜ் | கணிதம் 1ம் இடம்<br>சங்கீதம் 3ம் இடம் |
| சி. லாவண்யா | சுகாதாரம், சங்கீதம் 1ம் இடம்<br>ஆங்கிலம், கணிதம், தமிழ், விஞ்ஞானம் 2ம் இடம்<br>சமூகக்கல்வி 3ம் இடம் |
| ஸ்ரீ. கணேசலிங்கம் | சமூகக்கல்வி 2ம் இடம்<br>ஆங்கிலம் 3ம் இடம் |
| சோ. பதுருகுலன் | சங்கீதம் 2ம் இடம் |
| சி. ஹரிகாலன் | கணிதம் 3ம் இடம்<br>சித்திரம் 3ம் இடம் |
| க. விகர்ணன் | விஞ்ஞானம் 3ம் இடம் |
| அ. ருசாந்தினி | நடனம் 3ம் இடம் |
| இ. இன்பராஜ் | சித்திரம் 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 8

| | |
|---|---|
| நி. பிரியா | சங்கீதம் 1ம் இடம் |
| சோ. திபேசன் | சங்கீதம் 3ம் இடம் |
| க. ஜென்சி | நடனம் 2ம் இடம் |
| ஸ்ரீ. வாகீசன் | தமிழ், ச. கல்வியும் வரலாறும், சித்திரம், விஞ்ஞானம் 1ம் இடம்<br>சுகாதாரம் 2ம் இடம்<br>கணிதம், சமயம் 3ம் இடம் |
| சி. கார்த்திகா | சமயம், கணிதம், சுகாதாரம் 1ம் இடம்<br>தமிழ், ஆங்கிலம் 2ம் இடம் |
| சி. சுஜிதா | ஆங்கிலம் 1ம் இடம் |
| க. நிஷாந்தினி | சமயம் 2ம் இடம்<br>தமிழ், ஆங்கிலம் 3ம் இடம் |
| இ. கிருஷ்ணராஜ் | கணிதம், ச. கல்வியும் வரலாறும், விஞ்ஞானம் 2ம் இடம் |
| வே. சிவமயூரி | ச. கல்வியும் வரலாறும், விஞ்ஞானம், சுகாதாரம் 3ம் இடம் |
| இ. யுரேனஸ் | சித்திரம் 2ம் இடம் |
| க. நிரோஜன் | சித்திரம் 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 9

| | |
|---|---|
| சி. சிவரூபன் | தமிழ், சித்திரம் 1ம் இடம் |
| ச. வாகீசன் | கணிதம், விஞ்ஞானம், சமயம் 1ம் இடம் |
| இ. பிரசன்னா | சமூகக்கல்வி 1ம் இடம்<br>தமிழ், விஞ்ஞானம் 2ம் இடம்<br>சமயம் 3ம் இடம் |
| த. ஜீவிதா | சங்கீதம் 1ம் இடம்<br>கணிதம் 2ம் இடம்<br>ஆங்கிலம் 3ம் இடம் |
| செ. கவிதா | ஆங்கிலம், நடனம் 1ம் இடம் |
| பா. சுகந்தினி | சுகாதாரம் 1ம் இடம்<br>விஞ்ஞானம் 2ம் இடம் |
| ஜெ. காயத்திரி | ஆங்கிலம், சமயம், சங்கீதம் 2ம் இடம்<br>சுகாதாரம் 3ம் இடம் |
| ஆ. தமயந்தி | தமிழ் 3ம் இடம் |
| சு. கிருஷ்ணப்பிரியா | கணிதம் 3ம் இடம் |
| சி. தர்சினி | சமூகக்கல்வி 3ம் இடம் |
| ஆ. கசனிகா | சங்கீதம் 3ம் இடம் |
| தி. தாட்சாயினி | சுகாதாரம் 3ம் இடம் |
| பொ. லெனின் | சித்திரம் 2ம் இடம் |
| ச. சுரேந்திரன் | சித்திரம் 3ம் இடம் |
| சிவராஜினி | நடனம் 2ம் இடம் |
| கோகிலப்பிரியா | நடனம் 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 10

| | |
|---|---|
| யோ. தயானந் | கணிதம் 1ம் இடம்<br>விருப்புக்குரியபாடம் தமிழ்,, சமூகக் கல்வி 2ம் இடம் |
| ப. கஜலட்சுமி | விஞ்ஞானம், சமயம், நடனம் 1ம் இடம்<br>மகளிர்தினம் கட்டுரை போட்டி 1ம்இடம்<br>தமிழ். புவியியல், விவசாயம், சமூகக் கல்வி 3ம் இடம் |
| சோ. இராகுலன் | சமயம், சமூகக்கல்வி, ஆங்கிலம், புவியியல், ஆங்கில இலக்கியம், விவசாயம் 1ம் இடம்<br>கணிதம் 2ம் இடம்<br>விஞ்ஞானம், நடனம் 3ம் இடம் |
| வி. விநோதீபா | தமிழ் 1ம் இடம்<br>சமயம், புவியியல் 3ம் இடம்<br>சிறுவர்தினம் கட்டுரை போட்டியில் பரிசில் பெற்றமை |
| ஞா. ஞானவேணஜன் | வர்த்தகமும் கணக்கியலும் 1ம் இடம்<br>சித்திரம் 2ம் இடம் |
| து. விஜயபிரகாஷ் | தமிழ் இலக்கியம், வர்த்தகமும் கணக்கியலும் 1ம் இடம் |
| தி. தர்சினி | சங்கீதம் 1ம் இடம்<br>மனையியல் 3ம் இடம் |
| க. ரஞ்சித் | கணிதம், விஞ்ஞானம் 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சி. சிவசஜிதா | வர்த்தகமும் கணக்கியலும் 1ம் இடம்<br>ஆங்கிலம் 2ம் இடம்<br>ஆங்கில இலக்கியம், சங்கீதம் 3ம் இடம் |
| சீ. சுபித்திரா | நடனம் 1ம் இடம்<br>தமிழ், ஆங்கிலம், ஆங்கில இலக்கியம் 3ம் இடம் |
| து. வானதி | சங்கீதம், விவசாயம் 2ம் இடம் |
| சி. சிவதாரணி | தமிழ் இலக்கியம் 3ம் இடம் |
| ஜெ. ஜெகஜனனி | மனையியல் 1ம் இடம் |
| இ. நிசாந்தினி | மனையியல் 2ம் இடம் |
| செ. கவிசலா | ஆங்கில இலக்கியம் 2ம் இடம் |
| தி. ரூபி | வர்த்தகமும் கணக்கியலும் 3ம் இடம் |
| வி. லாவண்யா | தமிழ் இலக்கியம் 3ம் இடம் |
| சி. விமலதாஸ் | சித்திரம் 3ம் இடம் |

❀ ❀ ❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த (சா / த) - 2001

## விசேட சித்திகள் அடிப்படையில் பரிசில் பெறுவோர்

**பா. சுரேஸ்கண்ணா**

சமயம்
மொழியும் இலக்கியமும்
கணிதம்
சமூகக்கல்வியும் வரலாறும்
புவியியல்
வணிகக்கல்வி

கட்டுடை சைவப்பிரகாச அதிபர் கட்வுள் சுப்பிரமணியம் அவர்களால் தமது தந்தையார் தம்பிஐயா அவர்கள் நினைவாக வழங்கப்படும் தங்கப்பதக்கம் க. பொ. த. (சா/த) பரீட்சையில் முதன்மை பெறுபேறு பெற்ற செல்வன் பா. சுரேஸ்கண்ணாவுக்கு வழங்கப்படுகிறது.

**சி. கபில்ராஜ்**

சமயம்
கணிதம்
தமிழ் இலக்கியம்
வணிகக்கல்வி

(ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றமைக்காக திருமதி. க. பிரபாகரனால் சிறப்புப் பரிசிலும் வழங்கப்படுகின்றது.)

**ஸ்ரீ. ஸ்ரீவஸ்ரன்** — தமிழ் இலக்கியம்

**ப. ரமேஸ்கண்ணா** — சமயம், தமிழ் இலக்கியம்

**சீ. ஜங்கரன்** — சமயம்

**வீ. திருக்குமாரன்** — சமயம்

**சி. ராஜ்குமார்** — சமயம்

**இ. குன்றக்குமரன்** — தமிழ் இலக்கியம்

**சா. ஜிந்துஜா** — சமயம்

**கு. ஜெகஜனனி** — சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அ. துவாதிகா | சமயம் |
| வி. தனுசியா | சமயம்<br>தமிழ் இலக்கியம் |
| பூ. ஜெகதீபா | சமயம் |
| க. கோபிநா | சமயம்<br>தமிழ் இலக்கியம் |
| ந. தர்சிகா | தமிழ் இலக்கியம் |
| க. அனித்தா | சமயம் |
| ஏ. அர்ச்சனா | சமயம்<br>தமிழ்இலக்கியம் |
| வி. தர்மினி | தமிழ் இலக்கியம் |
| ப. பிரதீபா | தமிழ் இலக்கியம் |

## ஆண்டு 12 (வர்த்தகம்)

| | | |
|---|---|---|
| க. சந்திரகுமார் | கணக்கியல்<br>வர்த்தகம்<br>பொருளியல் | 1ம் இடம் |
| அ. வைகுந்தன் | கணக்கியல்<br>வர்த்தகம்<br>பொருளியல் | 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 12 (கலை)

| | |
|---|---|
| சி. ஜனனி | இந்துநாகரிகம், தமிழ் 1ம் இடம்<br>அளவையியல் 2ம் இடம் |
| இ. ரேகா | அளவையியல், ஆங்கிலம் 1ம் இடம்<br>தமிழ், இந்துநாகரிகம் 2ம் இடம் |
| சி. யசித்திரா | சங்கீதம் 1ம் இடம்<br>ஆங்கிலம் 2ம் இடம் |
| பூ. சயன்ரா | இந்துநாகரிகம், தமிழ் 3ம் இடம் |
| மா. கௌசல்யா | நாடகமும் அரங்கியலும் 1ம் இடம் |
| பா. சுமதி | நடனம் 1ம் இடம் |
| மா. தாட்சாயினி | நடனம் 2ம் இடம் |
| சு. நவசுகி | நடனம் 3ம் இடம் |
| த. சுஜனி | சங்கீதம் 2ம் இடம் |
| தெ. கலைவாணி | சங்கீதம் 3ம் இடம் |
| சோ. கோகிலன் | புவியியல், சித்திரம் 1ம் இடம்<br>ஆங்கிலம் 3ம் இடம் |
| த. ஜெயக்குமார் | புவியியல் 2ம் இடம் |
| சி. ஜெயவதனன் | புவியியல் 3ம் இடம் |
| க. நந்தா அமிர்தேஸ் | சித்திரம் 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 13 (வர்த்தகம்)

| | |
|---|---|
| ஸ்ரீ. ஜெயவதனி | கணக்கியல், வணிகக்கல்வி, பொருளியல் 1ம் இடம் |
| த. அஜந்தன் | கணக்கியல், வணிகக்கல்வி 2ம் இடம்<br>பொருளியல் 3ம் இடம் |
| அ. ஜெகதீபன் | கணக்கியல், பொருளியல் 3ம் இடம் |

## தரம் 13 (கலை)

| | |
|---|---|
| சோ. சிறீபாலா | நாடகம் அரங்கியல் 1ம் இடம் |
| இ. பூங்கா | நாடகமும் அரங்கியலும் 2ம் இடம் |
| செ. கஸ்தூரி | நாடகம் அரங்கியலும் 2ம் இடம் |
| பா. இராகுலன் | சித்திரம் 1ம் இடம்<br>தமிழ் 3ம் இடம் |
| க. யசோதரன் | சித்திரம் 3ம் இடம் |
| கு. மோகனதாஸ் | சங்கீதம் 1ம் இடம் |
| இ. சசிகரன் | சங்கீதம் 2ம் இடம் |
| சி. ஜதீஸ்கரன் | சங்கீதம் 3ம் இடம் |
| ப. சிவசக்தி | தமிழ், அளவையியல் 1ம் இடம்<br>இந்துநாகரிகம் 2ம் இடம் |
| இ. வனிதா | தமிழ், அளவையியல் 2ம் இடம் |
| பா. சுமதி | இந்துநாகரிகம் 1ம் இடம்<br>அளவையியல் 3ம் இடம் |
| க. காந்தரூபி | இந்துநாகரிகம் 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2001
## சித்தி பெற்றோர்

S. அனுசன்

K. அமலன்

S. ஜனார்த்தனன்

S. கபிலவாகீசன்

S. ராகவசொரூபன்

S. சஜீவன்

V. தனகோபி

V. அஜந்தினி - இக்கல்லூரியில் தொடர்ந்து கல்வி கற்பதால் இவருக்கு விசேட பரிசில் திட்டத்தின் கீழ் ரூபா 1500 காசோலை வழங்கப் படுகிறது.

J. துஷ்யந்தி

S. இசைச்செல்வி

S. நிசாந்தி - இக்கல்லூரியில் தொடர்ந்து கல்வி கற்பதால் இவருக்கு விசேட பரிசில் திட்டத்தின் கீழ் ரூபா 1500 காசோலை வழங்கப் படுகிறது.

K. தர்சிகா

V. தயாளினி

T. வேணிகா

A. அருந்ததி

K. பிந்துஜா

இவர்களுக்கு ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு சு. தட்சணாமூர்த்தி அவர்கள் அன்பளிப்புச் செய்கிறார்.

## க. பொ. த (உ.த) பரீட்சை - 2001
## அதிகூடிய புள்ளிகள் பெற்றோர்

**வர்த்தகப்பிரிவு**

பா. ஜங்கரன் - இவர் பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

த. சுஜித்தா

பா. அரவிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைப்பிரிவு**

*தி. ஸ்ரீதேவி*

*ம. பாமினி*

*வே. அனுசா*

## கோட்டமட்டப் போட்டிகள்

### தமிழ்த்தினப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| *ச. அருந்ததி* | பிரிவு 1 | 1ம் இடம் | பேச்சு |
| *தே. பரணன்* | பிரிவு 1 | 1ம் இடம் | ஆக்கத்திறன் |
| *ந. கோகிலப்பிரியா* | பிரிவு 3 | 2ம் இடம் | தனிநடனம் |
| *இ. ரேகா* | பிரிவு 5 | 2ம் இடம் | பேச்சு |
| *ப. சிவசக்தி* | பிரிவு 5 | 3ம் இடம் | எழுத்துஆக்கம் |
| *வே. அனுசா* | பிரிவு 5 | 3ம் இடம் | தனிநடனம் |

### ஆங்கிலதினப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| V. *வாமணன்* | தரம் 3 | 1ம் இடம் | Copy writing |
| P. *நிவேதினி* | தரம் 4 | 3ம் இடம் | Dictation |
| S. *சஜிதா* | தரம் 8 | 3ம் இடம் | Cretivewriting |
| T. *ஜீவிதா* | தரம் 9 | 3ம் இடம் | Recitation |
| S. *தமிழினி* | தரம் 10 | 3ம் இடம் | Dictation |
| B. *சுரேஸ்கண்ணா* | தரம் 11 | 3ம் இடம் | Cretivewriting |
| S. *ராஜ்குமார்* | தரம் 10 | 3ம் இடம் | Dictation |

மேற்பிரிவு பெண்கள் ஆங்கில நாடகம் கோட்ட மட்டத்தில் 2ம் இடம்

### சர்வதேச மகளிர் தினம்

| | | | |
|---|---|---|---|
| *ப. கஜலட்சுமி* | 2ம் இடம் | தரம் 11 | கட்டுரை |
| *இ. ரேகா* | 2ம் இடம் | தரம் 13 | கட்டுரை |
| *வி. விநோதீபா* | ஆறுதல் பரிசு | தரம் 11 | கட்டுரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சகலகலாவல்லிமாலைப் போட்டி

| | | |
|---|---|---|
| கு. மோகனதாஸ் | தரம் 13 | 3ம் இடம் |

### திருமுறைப் பண்ணிசைப் போட்டி

| | | |
|---|---|---|
| ச. ஆதித்தன் | தரம் 7 | 1ம் இடம் |
| கோ. கிரிசாந்தி | தரம் 6 | 2ம் இடம் |
| அ. அமிர்தசிந்துஜன் | தரம் 6 | 3ம் இடம் |
| த. கஜனி | தரம் 12 | 2ம் இடம் |
| த. ஜீவிதா | தரம் 9 | 1ம் இடம் |

### மனைப்பொருளியல் போட்டி

| | | | |
|---|---|---|---|
| சி. கஜேந்தினி | தரம் 11 | 1ம் இடம் | அறிவுத்திறன் |
| தி. பிரசாந்தி | தரம் 10 | 1ம் இடம் | அறிவுத்திறன் |
| ப. பிரதீபா | தரம் 11 | 1ம் இடம் | ஆக்கத்திறன் |
| தி.தர்சினி | தரம் 10 | 1ம் இடம் | ஆக்கத்திறன் |

### தொண்டுபடு செயன்முறைப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| ச. சேவனிலா | தரம் 3 | 1ம் இடம் | மனனம் |
| த. தாரணி | தரம் 4 | 3ம் இடம் | மனனம் |
| வி. தனுசியா | தரம் 11 | 3ம் இடம் | மனனம் |
| அ. சண்முகப்பிரியா | தரம் 1 | 1ம் இடம் | பண்ணிசை |
| வி. ஜர்சிகன் | தரம் 2 | 1ம் இடம் | பண்ணிசை |
| ச. சேவனிலன் | தரம் 3 | 1ம் இடம் | பண்ணிசை |
| தே. பரணன் | தரம் 4 | 3ம் இடம் | பண்ணிசை |
| அ. அமிர்தசிந்துஜன் | தரம் 6 | 1ம் இடம் | பண்ணிசை |
| ச. ஆதித்தன் | தரம் 7 | 1ம் இடம் | பண்ணிசை |
| ச. இனியன் | தரம் 1 | 3ம் இடம் | பண்ணிசை |
| அ. மதுபாஜினி | தரம் 2 | 2ம் இடம் | பண்ணிசை |
| த. துசாயினி | தரம் 4 | 2ம் இடம் | பண்ணிசை |
| அ. ஆகன்யா | தரம் 5 | 1ம் இடம் | பண்ணிசை |
| கோ. கிரிசாந்தி | தரம் 6 | 2ம் இடம் | பண்ணிசை |
| த. கஜனி | தரம் 12 | 2ம் இடம் | பண்ணிசை |
| தி. தர்சன் | தரம் 5 | 2ம் இடம் | செயன்முறை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| யோ சாளியன் | தரம் 6 | 1ம் இடம் | செயன்முறை |
| க. தட்சணாமூர்த்தி | தரம் 8 | 1ம் இடம் | செயன்முறை |
| ச. சுரேந்திரன் | தரம் 9 | 2ம் இடம் | செயன்முறை |
| மா. ஜெகராசா | தரம் 12 | 1ம் இடம் | செயன்முறை |
| தி. தர்சினி | தரம் 10 | 3ம் இடம் | செயன்முறை |
| க. விஜயசிறி | தரம் 12 | 3ம் இடம் | செயன்முறை |

## சித்திரப் போட்டி

### சிறந்த ஓவியர்களுக்கான சிறப்புப் பரிசில்கள்

த. கபேஸ் - Y.M.C.A யினால் நடாத்தப்பட்ட சமாதானத்திற்கான சுவரொட்டிப் போட்டி 2001 (சிறப்புப்பரிசில்)

யாழ் மறைமாவட்ட மனிதமுன்னேற்ற நடுநிலையத்தின் சமூக விழிப்புணர்வுக்குழு நடாத்திய சுவரொட்டிப் போட்டி (பாராட்டுப் பரிசு)

மகளிர் அபவிருத்தினால் நடாத்தப்பட்டஓவியப் போட்டி 2001 (சிறப்புப்பரிசு)

கு. தர்சிகா - லையன்ஸ் கழகத்தினால் நடாத்தப்பட்ட "கல்வியே சுருந்தனம்" ஓவியப் போட்டி மாவட்ட மட்டம் 1ம் இடம்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்பாதுகாப்பு நிதியத்தால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டி 1ம் இடம்

கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆதரவில் இலங்கை வங்கி நடாததிய ஓவியப் போட்டி சிறப்புச் சான்றிதழ்

ஸ்ரீ. ஸ்ரீதக்சன் - Y.M.C.A யினால் நடாத்தப்பட்ட சமாதானத்திற்கான சுவரொட்டிப் போட்டி 2001 சிறப்புப்பரிசு

து. விஜயப்பிரகாஷ் - லயன்ஸ் கழகம் நடாத்திய ஓவியப் போட்டி பிராந்திய மட்டம் 2ம் இடம்

சோ. கோகிலன் - கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆதரவில் இலங்கை வங்கி நடாத்திய ஓவியப் போட்டி சிறப்புச் சான்றிதழ்

ஸ்ரீ. வாகீசன் - லயன்ஸ் கழகம் நடாத்திய ஓவியப் போட்டி பிராந்திய மட்டம் 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. தவசீலன் - தேசிய சமாதான வாரம் - 2001
வீட்டு விபத்துக்களும் தடுப்பு முறைகளும் தொடர்பான ஓவியப் போட்டி 1ம் இடம்

இ. சக்திதரன் - லயன்ஸ் கழகம் நடாத்திய ஓவியப் போட்டி பிராந்திய மட்டம் 3ம் இடம்

பா. சுரேஸ்கன்னா - சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டி 2ம் இடம்.

சி. சிவரூபன் - லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட ஓவியம் கழக மட்டம் 1ம் இடம்.

ச. சஜீவன் - லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட ஓவியம் கழக மட்டம் 1ம் இடம்.

ச. அருணன் - லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட ஓவியம் கழக மட்டம்

## சகலதுறைச் சிறப்புப் பரிசு

| | | |
|---|---|---|
| சிறந்த மாணவன் | - | சோ. கோகிலன் |
| சிறந்த மாணவி | - | த. மாலதி |
| சிறந்த மெய்வல்லுநர் (ஆண்) | - | பா. ஜனார்த்தனன் |
| சிறந்த மெய்வல்லுநர் (பெண்) | - | ப. சிவசக்தி |
| சிறந்த சாரணர் | - | தி. சத்தியநாதன் |
| சிறந்த வழிகாட்டி | - | பே. டயானி |
| சிறந்த முதலுதவியாளன் | - | த. இந்துஜன் |

2001 இல் லீவு எடுக்காது ஒழுங்காக கல்லூரிக்கு வருகை தந்தசிறந்த ஆசிரியர் - செல்வி பொன்னம்பலம் ஜெயவதனா

திரு இ. அம்பலவாணர் நினைவுப் பரிசு
அன்பளிப்பு - திரு அ. குகதாசன் (முகாமையாளர் மக்கள் வங்கி கன்னாதிட்டி யாழ்ப்பாணம்)
பரிசு பெறுபவர் - செல்வன் செ. அற்புதராஜ்
(யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

இராகம் : ஹம்சத்வனி தாளம்: ஆதி

**பல்லவி**

மன்னிடும் இணுவில் மத்திய கல்லூரி
மாதாவைப் பணிந்திடுவோம் - நாமே

**அனுபல்லவி**

கன்னல் மொழித்தமிழ் கல்வி கலையருளி
கற்பவை கற்றுமே கற்றாங் கொழுக நல்கும்

**சரணம்**

ஆன்ம ஞான வழி அறநெறி காட்டியே
மேன்மைகொள் சைவநீதி மேவிட ஊட்டியே
நான்மறை போற்றிடும் நல்வழி காட்டியே
தேன்தமிழ் பொழிந்திடும் இணுவையூர் நாட்டிலே

மெஞ்ஞானமாம் சமயம் கணிதமும் ஆங்கிலம்
விஞ்ஞான பௌதீக விளங்குநுண் கலைகளும்
அஞ்ஞானம் அகற்றிடும் அறிவொளி காட்டியே
எஞ்ஞான்றும் ஞானமதை எழிலாகத் தரும்அன்னை

எழுத்தறி வித்திடும் இறையவரைப் பணிவோம்
பழுத்திடும் செந்தமிழ் பண்பினை நாம் மறவோம்
வழுத்தியே வாழ்த்துவோம் வண்டமிழ் அன்னையை
செழித்திடும் கல்விகலை செல்வியாம் இணுவையூர்

இணுவில் மத்திய கல்லூரி வாழி வாழி
இனிய அதிபரும் இணையாசிரியர் வாழி
கணுமுற்றிய கரும்பாய் கல்லூரி தித்தித்து வாழி
கலைகல்வி ஓங்கிவாழி கவினிணுவையும் வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org